**செய்தி வெளியீடு எண்: 734** **நாள்: 30.10.2019**

## செய்தி வெளியீடு

## தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளில் பெருமளவு திடக் கழிவுகள் அகற்றும் பணி தொடக்கம் பொதுமக்கள் ஒத்துழைப்பு தர வேண்டுகோள்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் திட்டப்பகுதிகளில் உள்ள பன்னடுக்கு மாடி தொகுப்புகளுக்கு இடையே குப்பை மற்றும் திடக்கழிவுகள் சேர்ந்துள்ளதால் குடியிருப்பு பகுதிகளின் சுற்றுப்புற சுகாதாரம் பாதிக்கப்படுவதுடன், மழைக் கால தொற்று நோய்களும் ஏற்படுகின்றன. இதனை தடுக்க தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளில் சேர்ந்துள்ள குப்பைகளை அகற்ற துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியும் இணைந்து பெருமளவு திடக்கழிவு அகற்றும் பணிகளை 16.10.2019 முதல் 10 மண்டலங்களிலும் முறைப்படுத்தி கடந்த 15 நாட்களாக செயல்படுத்தி வருகிறது.

இப்பணிகளுக்கான துப்புரவு பணியாளர்கள் மற்றும் குப்பை அகற்றும் வாகனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வழங்குகிறது. இப்பணிக்காக ரூ. 18 இலட்சம் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்பு பகுதிகளில் இனி வரும் காலங்களில் குப்பை சேரா வண்ணம் அன்றாடம் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூ.85 லட்சம் மதிப்பீட்டில் குடியிருப்பு பகுதிகளில் 420 குப்பை தொட்டிகள் அமைக்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி வாகனங்கள் மூலம் குப்பைகள் அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே, புதிதாக அமைக்கப்படும் குப்பை தொட்டிகளை உரியமுறையில் பயன்படுத்தி, பொதுமக்கள் தங்கள் சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரிக்க கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

மேலாண்மை இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**